**செய்தி வெளியீடு எண்: 76/2023** **நாள்: 26.06.2023**

## பத்திரிக்கைச் செய்தி

## தண்டையார்ப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் கூடுதல் நுழைவாயில் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தும் இடம்

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி திறந்து வைத்தார்

தண்டையார்ப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிகாக கூடுதல் நுழைவுவாயில்கள் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தும் இடம் ஆகியவற்றை பயணிகளின் வசதிகாக 26.06.2023 இன்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) திறந்து வைத்தார்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்துள்ளதாவது:-

பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், பயணிகளின் கோரிக்கையை ஏற்று கூடுதலாக திறக்கப்பட்டுள்ள இரண்டு நுழைவாயில்கள் (E2 & E3) மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகள் போன்ற வசதிகளுடன் இணைக்கப்பட்டு பயணிகளின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது. மேலும், E3 நுழைவாயிலில் 200 இருசக்கர வாகனங்களை நிறுத்தும் அளவிற்கு வாகன நிறுத்தம் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரோ இரயில் பயணிகள் இந்த வசதியை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

@cmrlofficial Chennai Metro Rail @chennaimetrorail
@ChennaiMetroRail www.chennaimetrorail.org